**C.C. 65 /2013** **05.03.2018**

**அ.சா.1 பால்பாண்டி**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

இவ்வழக்கு சம்பந்தப்பட்ட சொத்து 1வது எதிரி மெய்யப்பனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பி.சி.தம்பி என்பவர் மெய்யப்பனுடைய நண்பர் என்றால் அது எனக்கு தெரியாது. ஜெயபிரசாந் என்பவர் பி.சி.தம்பினுடைய மகன் என்றால் சரிதான். ஜெயபிரசாந்த் என்பவர் ரஷ்யாவில் வசித்துவருகிறார் என்றால் எனக்கு தெரியாது. ஜெயபிரசாந்த் ரஷ்யாவிலேயே திருமணம் செய்து அங்கேயே குடியி உரிமை பெற்று வசித்துவருகிறார் என்றார் என்றால் எனக்கு தெரியாது. மெய்யப்பன் பி.சி தம்பிக்கு பொது அதிகாரபத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பி.சி தம்பி என்பவர் பிரச்சனைக்குரிய சொத்தை தானம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் கிரையம் செய்துகொடுத்துள்ளார். இந்த இடப்பிரச்சனை சம்பந்தமாக 3ம் தேதி சுதாகர் வீட்டிற்கு சென்று அவரை ஆட்கள் வைத்து மிரட்டியதாக சொன்னால் சரியல்ல. இந்த சம்பவம் சம்பந்தமாக நாகமலை புதுக்கோட்டை காவல் நிலையத்தில் என் மீது குற்ற எண்.8-2008ல் ஒரு வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1வது எதிரி அவரை ஏமாற்றிவிட்டதாக பி.சி.தம்பி மற்றும் அவரது மகன் ஜெயபிரசாநத் ஆகியோர் மீது சென்னை காவல் துறை ஆணையர் மற்றும் நீலாங்கரை காவல் நிலையம் ஆகிய இடங்களில் புகார் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. பிரச்சனைகுரிய சொத்து சம்பந்தமாக மெய்யப்பன் பி.சி.தம்பி மற்றும் ஜெயபிரசாந்த் ஆகியோர் மீது திருமங்கலம் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.101-2007ல் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த விபரங்கள் தெரிந்துதான் ஜெயபிரசாந்திடம் இந்த சொத்து சம்பந்தமாக பொது அதிகாரபத்திரம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. மெய்யப்பன் பி.சி.தம்பிக்கு எழுதிக்கொடுத்திருந்த பொது அதிகாரபத்திரத்தை ரத்துசெய்துவிட்டார் என்றால் இல்லை. சென்னை சைதாபேட்டை பதிவு அலுவலகத்தில் தான் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பொது அதிகாரபத்திரம் பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். ஜெயபிரசாந்த் எனக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் பொது அதிகாரபத்திரம் ஜெயபிரசாந்த் எழுதிதரவில்லை என்றும் ஆள்மாறாட்டம் செய்து வேறுறொரு நபரை வைத்து ஜெயபிரசாந்த் எனக்கு பொதுஅதிகாரபத்திரம் எழுதிக்கொடுத்ததாக தயார்செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. மெய்யப்பன் ஜெயபிரசாந்த் பொதுஅதிகார பத்திரம் எழுதிக்கொடுக்க ஆட்சேபணை செய்திருந்ததால் நாங்கள் செக்கானூரணி பதிவு அலுவலகத்தில் எனக்கு எழுதிகொடுக்கப்பட்ட பொது அதிகாரபத்திரத்தில் பதிவுசெய்யாமல் சைதாபேட்டை பதிவு அலுவலகத்தில் பதிவுசெய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கு எழுதிகொடுக்கப்பட்ட அதிகார பத்திரத்தின்மூலம் அந்த நிலத்தை என் மனைவிக்கு கிரையம்

செய்துகொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் முதலில் என் மனைவிக்கு ரூபாய் 1,66,460க்கு கிரையம் உடன்படிக்கை பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். அதன்பிறகு அந்த நிலத்தை என் மனைவிக்கு ரூபாய் 99 ஆயிரத்திற்கு கிரையபத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். என்னுடைய மனைவி திருமங்கலம் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.441-2007ல் என்ற வழக்கை எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்துவருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போதுதான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல அந்த வழக்கு வேறு இந்த வழக்கு வேறு. நான், பி.சி.தம்பி மற்றும் ஜெயபிரசாந்த் ஆகியோர் மெய்யப்பன் என்பவரை மேசாடி செய்யவேண்டும் என்பதற்காகத்தான் அடுத்து அடுத்து நிறைய பத்திரங்கள் பதிவுசெய்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் மெய்யப்பன் என்பவரை மோசடி செய்ய முயற்சிசெய்ததால்தான் மெய்யப்பன் பி.சி.தம்பிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகாரபத்திரத்தை ரத்துசெய்துவிட்டு மெய்யப்பன் 2வது எதிரிக்கு பொது அதிகாரபத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் 2வது எதிரி 6 நபர்களுக்கு கிரையம் செய்துகொடுத்துவிட்டார் என்றும் அந்த 6 நபர்களும் 3வது எதிரிக்கு பிரச்சனைக்குரிய சொத்துகுறித்து கிரையம் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வழக்கு புகாரை 8 நபர்கள்மீது கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாருக்கும் புகாரில் குறிப்பிடபட்டுள்ள 8 நபர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ம.வி:

இல்லை.